**BASEL**
**LANDSCHAFT**
BIZ தொழில் தகவல் நிலையம்
தொழில், மேற்படிப்பு மற்றும் தொழில் தொடர்பான ஆலோசனை

**பிராட்தெல்ண் (Pratteln) இல் தொழில்முறை நிகழ்ச்சி 2019 - உங்கள் தாய் மொழியில் வழிநடாத்தப்படும்**.

அன்புள்ள பெற்றோர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள்,

உங்களுக்கு தொழில் ஒன்றை கற்பதற்கான பிள்ளைகள் இருக்கின்றார்களா, ஓர் தொழிலை தேர்வு செய்ய காத்திருப்பவர்களா? அல்லது நீங்கள் ஒரு தொழிலைக் கற்றுக்கொள்ள விரும்புகின்றீர்களா? அப்படியாயின் இத் தொழிற்கல்வி நிகழ்ச்சியைத் தவறவிடாதீர்கள். இந்த நிகழ்ச்சி **ஐப்பசி மாதம் (Oktober) 23ம் திகதியில் இருந்து 27ம் திகதி வரை** நடைபெறும். நாங்கள் உங்களுக்கு சுவிஸ் நாட்டிலுள்ள தொழில் திட்ட அமைப்பு முறை, தொழில் செயற்பாடு முறை பற்றி இங்கே எடுத்துக்காட்டுகின்றோம்.

நாங்கள் தொழிற்பயிற்சி பற்றிய பல்வேறு வழிமுறைகள் குறித்து உங்களுக்கும் அல்லது உங்கள் பிள்ளைகளுக்கும் தெரிவிக்கிறோம். நீங்கள் உங்கள் மகள்கள் அல்லது மகன்களை இந்த நிகழ்ச்சிக்கு அழைத்து வரவும். இதனால் இவர்கள் பலதரப்பட்ட தொழில் முறைகளை நேரடியாக பார்வையிடுவதன் மூலம் அல்லது கேட்பதன் மூலம் தொழில்களைப்பற்றி அறிந்து கொள்ள முடியும். இங்கு வருகை தரும் தொழில் நிபுணர்களிடமிருந்து தொழில் முறை பற்றிய கேள்விகளை கேட்டு அதற்கான பதில்களையும் பெற்றுக் கொள்ளமுடியும். "எங்கே எப்போது தொழில் ஒன்றை பெற்றுக் கொள்வது, தொழில் ஒன்றை படித்து முடித்த பின் அதனை தொடர்ந்து எப்படி கற்றுக்கொள்வது? எந்த தொழில் கற்பிக்கும் பாடசாலைக்கு போக வேண்டும்? அல்லது எவ்வளவு சம்பளம் (ஊதியப்பணம் ) பெற்றுக்கொள்ளலாம்”.

ஐப்பசி மாதம் (Oktober) 26ம் திகதி சனிக்கிழமையன்று, தமிழ் மொழியில் தொழில்முறை வழிகாட்டுதல் நடைபெறும். உங்களுக்கு விரிவான தகவல்களை பெறவேண்டுமானால் இந்த வலையத்தளத்தின் மூலம் **www.berufsschau.ch/fuer-eltern** பெற்றுக்கொள்ள முடியும். இந்த வலையத் தளத்தின் மூலம் உங்களுக்கான முன் பதிவினை (தமிழ் மூலம் வழிகாட்டி) பதிவு செய்யலாம். இதய பூர்வமாக உங்களை வரவேற்கின்றோம், உங்கள் வரவால் நாங்கள் மகிழ்ச்சி அடைவோம்!

**தமிழ் மொழியில் வழிகாட்டி: சனிக்கிழமை, 26.10.2019, நேரம்: மதியம் 12.30 மணி**

BASEL LANDSCHAFT
BIZ BERUFSINFORMATIONSZENTRUM
BERUFS-, STUDIEN- UND LAUFBAHNBERATUNG